# குடும்ப உறவைப் பேணுவோம்.

**ஷேய்க் எம்.எஸ்.எம் இம்தியாஸ் யூசுப்**

இரத்த பந்தத்தை அறபியில் 'ரஹ்ம்' என கூறப்படும். ரஹ்ம் என்பது அளவிலா அருளாளனாகிய (ரஹ்மான்) இடமிருந்து வந்தவை (அருட்கொடை)யாகும்.

இரத்த பந்தத்தை நேசிப்பதும் நெருங்கி நடப்பதும் நல்லவைகளை நன்மைகளை மட்டும் செய்வதும் இந்த இரத்த பந்த உறவை பிரிக்காமல் ஒட்டி நடப்பதுமே அரபியில் ''சிலதுர் ரஹிம்'' صِلَةُ الرَّحِمِ எனப்படுகிறது.

**உறவை பேணுவதன் அவசியம்:**

இந்த இரத்த உறவை அல்லாஹ் படைத்தப் போது ''அல்லாஹ் (அதனை நோக்கி) உன்னோடு ஒட்டி வாழ்பவனுடன் நானும் சேர்ந்து கொள்வேன். உன்னை முறித்துக் கொள்பவனை நானும் முறித்தக் கொள்வேன் என்று கூறினான் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பவர்: அபூ ஹுரைரா, நூல்: புகாரி)

இன்னுமொரு அறிவிப்பில்

அல்லாஹ் படைப்புகளைப் படைத்து முடித்தபோது, உறவானது எழுந்து அன்பாளன் அல்லாஹ்வின் அரியாசனத்தின் கால்களில் ஒன்றைப் பற்றி(க் கொண்டு மன்றாடி)யது. இரத்த உறவை துண்டித்து விட்டு வாழ்பவன் வந்து நிற்கும் இடமல்லவா இது என உறவு கேட்டது. அப்போது அல்லாஹ், "உன்னைப் பேணி நல்ல முறையில் நடந்து கொள்பவருடன் நானும் நல்லமுறையில் நடந்துகொள்வேன் என்பதும், உன்னைத் துண்டித்து விடுகிறவரை நானும் துண்டித்து விடுவேன் என்பதும் உனக்குத் திருப்தியளிக்க வில்லையா?" என்று கேட்டான். அதற்கு உறவு, "ஆம் (திருப்தியே) என் இறைவா!" என்று கூறியது. அல்லாஹ் "இது (அவ்வாறுதான்) நடக்கும்" என்று கூறினான். அறிவிப்பாளர் அபூ ஹுரைரா(ரலி),

"நீங்கள் விரும்பினால் "(நயவஞ்சகர்களே!) நீங்கள் (போருக்கு வராமல்) பின்வாங்கிக் கொண்டு பூமியில் குழப்பம் விளைவிக்கவும், உங்கள் உறவுகளைத் துண்டிக்கவும் முனைகிறீர்களா?" எனும் (திருக்குர்ஆன் **47:22**வது) வசனத்தை ஓதிக் கொள்ளுங்கள்" என்று கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி) நூல் புகாரி.

மற்றொரு அறிவிப்பில்

عَنْ عَائِشَةَ قَالَتْ قَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ الرَّحِمُ مُعَلَّقَةٌ بِالْعَرْشِ تَقُولُ مَنْ وَصَلَنِي وَصَلَهُ اللَّهُ وَمَنْ قَطَعَنِي قَطَعَهُ اللَّهُ

صحيح مسلم

“இரத்த உறவு அல்லாஹ்வுடைய அர்ஷை பிடித்துக் கொண்டு என்னை சேர்ந்து நடப்பவனை அல்லாஹ்வும் சேர்த்துக் கொண்டான். என்னை துண்டித்து நடப்பவனை அல்லாஹ்வும் துண்டித்துக் கொண்டான் என கூறியது.“ என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர் ஆயிஷா (ரலி) நூல்: முஸ்லிம்.

உறவு முறை, பிரிக்கப்படாத வகையில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என அல்லாஹ் படைப்பின் ஆரம்பத்திலேயே இட்ட கட்டளையாகும். உறவை சேர்த்து வாழ்பவனுடன் அல்லாஹ் சேர்ந்து கொள்கிறான் என்றால், அல்லாஹ்வுடைய அருள், அன்பு, உறவை பேணுபவனுக்கு கிடைக்கிறது என்று அர்த்தமாகும். உறவை எவர் துண்டித்து வாழ்கிறாரோ அவருக்கு அல்லாஹ்வுடைய ரஹ்மத் கிடைக்காது. அல்லாஹ்வுடைய ரஹ்மத்தை விட்டும் தூரமாகுபவன் நிச்சயம் நஷ்டமடைந்து விடுவான்.

இந்த உறவு பேணப்பட வேண்டும் என்ற செய்தி எல்லா சமூகத்திற்கும் சொல்லப்பட்ட இறைச் செய்திகளில் ஒன்றாகும்.

*“மனிதர்களே! உங்களை ஒரே ஆத்தமாவிலிருந்து படைத்த உங்கள் இரட்சகனை அஞ்சிக் கொள்ளுங்கள். அவன் அந்த ஆத்மாவிலிருந்து அவரது துணையை படைத்தான்.அவ்விரண்டு ஆத்மாக்களிலிருந்து அனேக ஆண்களையும் பெண்களையம் பரவச் செய்தான். எவரைக் கொண்டு நீங்கள் ஒருவர் மற்றவரிடம் (உரிமைகளைக்) கேட்டுக் (உதவி பெற்றுக்) கொள்வீர்களோ அந்த அல்லாஹ்வையும் மேலும் இரத்த உறவுகளை(த்துண்டித்து நடப்பதை)யும் அஞ்சிக் கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் உங்களைக் கண்காணிப்பவனாக இருக்கிறான். “* (4:1.)

அல்லாஹ்வை முன்னிறுத்தி ஒருவருக்கொருவர் உதவிகேட்டுக் கொள்வது போல் உறவுகளைப் பேணி அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுமாறு அல்லாஹ் கட்டளையிடுகிறான்.

*‘‘அல்லாஹ்வைத் தவிர வேறு எவரையும் வணங்கக் கூடாது பெற்றோருக்கும் நெருங்கிய உறவினர்களுக்கும் அநாதைகளுக்கும் ஏழைகளுக்கும் நன்மை செய்யுங்கள். மனிதர்களிடம் அழகானவையே பேசுங்கள் தொழுகையை நிலை நாட்டி ஸகாத்தும் கொடுங்கள் என இஸ்ராஈலின் மக்களிடம் நாம் உறுதிமொழி எடுத்ததை (எண்ணிப்பாருங்கள்.). அதன் பின்னரும் உங்களில் சொற்பமானோரைத் தவிர (மற்றையோர் அதனை) புறக்கணித்தீர்கள். இன்னும் நீங்கள் உதாசீனப் படுத்தியவர்களாகவே இருக்கின்றீர்கள் “* (அல் குர்ஆன் 2:83)

அல்லாஹ்விடம் கொடுத்த உறுதி மொழிகளில் ஒன்று உறவு முறைகளை பேணிக் கொள்வது என்பதை இவ்வசனத்தில் அல்லாஹ் கூறுவதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

நபி(ஸல்) அவர்கள் த..ஃவா பணியில் தவ்ஹீத் போதிக்கப்பட்ட அதே அமைப்பில் உறவு முறைகளை பேணுவது பற்றிய பிரச்சாரமும் இருந்ததை காணமுடிகிறது.

عَنْ أَبِي أَيُّوبَ رَضِيَ اللَّهُ عَنْهُ أَنَّ رَجُلًا قَالَ لِلنَّبِيِّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ أَخْبِرْنِي بِعَمَلٍ يُدْخِلُنِي الْجَنَّةَ قَالَ مَا لَهُ مَا لَهُ وَقَالَ النَّبِيُّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ أَرَبٌ مَا لَهُ تَعْبُدُ اللَّهَ وَلَا تُشْرِكُ بِهِ شَيْئًا وَتُقِيمُ الصَّلَاةَ وَتُؤْتِي الزَّكَاةَ وَتَصِلُ الرَّحِمَ

صحيح البخاري - (ج 5 / ص 202)

ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து என்னை சுவனத்தில் நுழையச் செய்கின்ற ஒரு காரியத்தை சொல்லித் தாருங்கள் என்றார். அப்போது நபித் தோழர்கள் (வியப்புற்று) “இவருக்கென்ன (ஆயிற்று)? இவருக்கென்ன (ஆயிற்று)?“ என்றனர். நபி(ஸல்) அவர்கள் “இவருக்கு ஏதோ தேவையிருக்கிறது (போலும்)!“ (என்று கூறிவிட்டு அவரிடம்.) நீர் அல்லாஹ்வை மட்டும் வணங்கு அவனுக்கு எதையும் இணையாக்காதே. தொழுகையை நிலை நாட்டி ஸகாத்தையும் கொடுத்து உறவு முறைகளையும் பேணிக் கொள் என கூறினார்கள். அறிவிப்பவர்: அபூ அய்யூப் அல் அன்சார் (ரலி) நூல்:புகாரி.

இபாதத்துகள் மூலம் சுவனம் நுழைவது போலவே இரத்த உறவுகளை பேணுவதன் மூலமும் சுவனம் நுழைய முடியும் என்பதை நபியவர்கள் விபரிக்கிறார்கள்.

عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللَّهُ عَنْهُ عَنْ النَّبِيِّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ مَنْ كَانَ يُؤْمِنُ بِاللَّهِ وَالْيَوْمِ الْآخِرِ فَلْيُكْرِمْ ضَيْفَهُ وَمَنْ كَانَ يُؤْمِنُ بِاللَّهِ وَالْيَوْمِ الْآخِرِ فَلْيَصِلْ رَحِمَهُ وَمَنْ كَانَ يُؤْمِنُ بِاللَّهِ وَالْيَوْمِ الْآخِرِ فَلْيَقُلْ خَيْرًا أَوْ لِيَصْمُتْ صحيح البخاري - (ج 19 / ص 105)

“எவர் அல்லாஹ்வையும், மறுமையையும் நம்பிக்கை கொள்கிறாரோ அவர் தனது விருந்தாளியை கண்ணியப்படுத்தட்டும். எவர் அல்லாஹ்வையும் மறுமையையும் நம்பிக்கை கொள்கிறாரோ அவர் தனது குடும்ப உறவை பேணிக் கொள்ளட்டும். எவர் அல்லாஹ்வையும் மறுமையையும் நம்பிக்கை கொள்கிறாரோ அவர் நல்லதை பேசட்டும், அல்லது வாய்மூடி இருக்கட்டும்.“ என நபி(ஸல்) கூறினார்கள் அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி) நூல்: புகாரி)

ஈமானிய நம்பிக்கையை உறுதிப்படுத்தும் அம்சங்களில் ஒன்றாக இரத்த உறவு முறையை நபியவர்கள் வலியுறுத்தி கூறுவதிலிருந்து இதன் முக்கியத்துவத்தை புரிந்து கொள்ள முடிகிறது.

எனவே உறுவுகளை துண்டித்து வாழ்வதன் விபரீதத்தை வன்மையாக கண்டித்தார்கள்

عَنْ مُحَمَّدِ بْنِ جُبَيْرِ بْنِ مُطْعِمٍ عَنْ أَبِيهِ قَالَ قَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ لَا يَدْخُلُ الْجَنَّةَ قَاطِعٌ

سنن الترمذي - (ج 7 / ص 140)

“உறவை முறித்து வாழ்பவன் சுவனம் நுழைய மாட்டான்“ என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பவர்: ஜுபைர் இப்னு முத்இம் (ரழி), நூல்: புகாரி, முஸ்லிம்)

சிற்சில காரியங்களுக்கு சிலர் உறவுகளை துண்டித்துக் கொண்டு வாழ்நாள் முழுவதும் பேசாமல் ஒதுங்கி விடுகிறார்கள். அல்லாஹ்வுக்காகவும் அல்லாஹ்வுடைய தூதருக்காகவும் மார்க்க விடயங்களுக்காகவும் எவரும் உறவுகளை பேணுவது மில்லை. துண்டிப்பதுமில்லை. உலக விவகாரங்களில் ஏற்பட்ட சில்லறைப் பிரச்சினை களுக்காகவே உறவை துண்டித்துக் கொள்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் இந்த எச்சரிக்கையை கவனத்தில் கொள்ளவேண்டும்.

இந்த உலகில் மிக சீக்கிரமாக அல்லாஹ்வுடைய தண்டனையை பெறக் கூடியவர் களாக, இரத்த இனபந்த உறவை துண்டிப்பவர்களும் அதன் பின்கு அநியாயம் செய்பவர்களும் இருக்கிறார்கள். என குர்ஆன் விபரிக்கின்றது.

பாவிகளின் பண்பாடுகளைப் பற்றி அல்லாஹ் பின்வருமாறு கூறுகிறான்:

فَهَلْ عَسَيْتُمْ إِنْ تَوَلَّيْتُمْ أَنْ تُفْسِدُوا فِي الْأَرْضِ وَتُقَطِّعُوا أَرْحَامَكُمْ (22) أُولَئِكَ الَّذِينَ لَعَنَهُمُ اللَّهُ فَأَصَمَّهُمْ وَأَعْمَى أَبْصَارَهُمْ (23

*நீங்கள் புறக்கணித்து பூமியில் குழப்பம் ஏற்படுத்தவும், உங்கள் உறவுகளை முறிக்க வும் முயல்வீர்களா? அவர்களையே அல்லாஹ் சபித்தான். அவர்களைச் செவிடாக் கினான். அவர்களின் பார்வைகளைக் குருடாக்கினான்.* (அல்குர்ஆன்: **47:22–23**)

பூமியில் குழப்பத்தை உண்டுபண்ணி உறவுமுறைகளை துண்டித்து வாழ்பவர்களுக்கு அல்லாஹ்வுடைய சாபம் உண்டு என்று அல்லாஹ் எச்சரிக்கிறான். அல்லாஹ்வுடைய சாபத்தை பெற்றவன் நிச்சயமாக இந்த பூமியில் நிம்மதியாக வாழ மாட்டான்.

الَّذِينَ يَنْقُضُونَ عَهْدَ اللَّهِ مِنْ بَعْدِ مِيثَاقِهِ وَيَقْطَعُونَ مَا أَمَرَ اللَّهُ بِهِ أَنْ يُوصَلَ وَيُفْسِدُونَ فِي الْأَرْضِ أُولَئِكَ هُمُ الْخَاسِرُونَ

*‘‘அவர்கள் அல்லாஹ்வின் உடன்படிக்கையை உறுதிப்படுத்திய பின் முறிக்கின்ற னர். (உறவுகள்) இணைக்கப்பட வேண்டுமென அல்லாஹ் கட்டளையிட்டதை முறிக் கின்றனர். பூமியில் குழப்பம் விளைவிக்கின்றனர். அவர்களே நஷ்டமடைந்தவர்கள்.* (அல்குர்ஆன்: **2:27**)

உறவு முறைகளை பாழ்படுத்தி வாழ்பவன் நஷ்டவாளி என்று அல்லாஹ் கூறுகிறான்.

‘‘உன்னை துண்டித்து வாழ்பவனுடன் நீ சேர்ந்து நட“ என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி)

உறவுக்காரர்கள் ஏதோ ஒரு காரணத்திற்காக கோபப்பட்டு பேசாமல் ஒதுங்கிப் போனாலும் உறவை துண்டித்துக் கொண்டாலும் அவர்களுடன் சேர்ந்து கொள்ளு

மாறு உறவை பேணிக் கொள்ளுமாறு அல்லாஹ்வுடைய தூதர் (ஸல்) அவர்கள் நற்போதனை செய்கிறார்கள்.

عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ سَمِعْتُ رَسُولَ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ يَقُولُ مَنْ سَرَّهُ أَنْ يُبْسَطَ لَهُ فِي رِزْقِهِ أَوْ يُنْسَأَ لَهُ فِي أَثَرِهِ فَلْيَصِلْ رَحِمَهُ صحيح البخاري - (ج 7 / ص 228)

“தமது வாழ்வாதாரம் (ரிஸ்க்) விசாலமாக்கப்படுவதும், வாழ்நாள் நீடிக்கப்படுவதும் யாருக்கு மகிழ்ச்சியளிக்குமோ அவர் தமது உறவைப் பேணி வாழட்டும்“ என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பவர்: அனஸ் பின் மாலிக் (ரழி), நூல்: புகாரி)

இரத்த உறவை பேணி வாழ்வதால் ஒருவனுடைய உணவு (வாழ்வாதாரம்) விசால மாக்கப்படுகிறது. பரகத் வழங்கப்படுகிறது. வாழ்நாளும் நீடிக்கப்படுகிறது.

வீட்டில் கஷ்டம், பஞ்சம், முஸீபத்து என்று எப்போதுமே சிலர் பேசிக் கொள்வார்கள். எவ்வளவு சம்பாதித்தாலும் ‘பரகத்’ இல்லை என்பார்கள். இத்தனை துன்பங்களும் எத னால் வருகிறது என்று சிந்தித்துப் பார்க்க மாட்டார்கள். ‘உறவை பேணாதவனுக்கு ஏழ்மை தொடர்கிறது என்பதைத்தான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இந்த நபிமொழி மூலம் விளக்கப்படுத்துகிறார்கள்.

மகிழ்ச்சிகரமான வாழ்வின் ஒரு அம்சம் இரத்த உறவை சொந்த பந்தத்தை உறவு களை பேணிப் பாதுகாப்பதில் உள்ளது என்றும் நற்செய்தி கூறப்படுகிறது.

எங்களுடைய உறவு அவர்களுக்கு தேவையில்லை என்றாலும் அவர்களுடைய உறவு எங்களுக்கு தேவை என்று ஒட்டி நடக்க வேண்டும். இதன் மூலமாக மனக் கசப்புகள் கூட நாளடைவில் மறைந்து போய் ஒற்றுமையாக வாழ வழியமையலாம்.

عَنْ عَبْدِ اللَّهِ بْنِ عَمْرٍو عَنْ النَّبِيِّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ لَيْسَ الْوَاصِلُ بِالْمُكَافِئِ وَلَكِنَّ الْوَاصِلَ الَّذِي إِذَا انْقَطَعَتْ رَحِمُهُ وَصَلَهَا -سنن الترمذي - (ج 7 / ص 139)

“பதிலுக்குப் பதில் உறவாடுகின்றவர் (உண்மையில்) உறவைப் பேணுகின்றவர் அல்லர். மாறாக உறவு முறிந்தாலும் அந்த உறவுடன் இணைகின்றவரே உறவைப் பேணுபவர் ஆவார்“ என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பவர்: அப்துல்லாஹ் பின் அம்ர் (ரழி), நூல்: புகாரி)

அவர் பேசினால்தான் நான் பேசுவேன். அவர் என் வீட்டுக்கு வந்தால்தான் அவர் வீட்டுக்குப் போவேன் என்ற அடிபடையில் உறவு முறையை பேணுபவர் உண்மையில் உறவைப் பேணி நடந்தவராக மாட்டார். அவர் பேசாவிட்டாலும் நான் பேசுவேன். அவர் என் வீட்டுக்கு வராவிட்டாலும் அவர் வீட்டுக்கு நான் போவேன் என்று வலியச் சென்று உறவைப் பேணுபவர்தான் உண்மையிலே உறவைப் பேணியவராவார். இவருக்கு அதிக சிறப்பும் மரியாதையும் அல்லாஹ்விடம் உண்டு.

عَنْ أَبِي هُرَيْرَةَ أَنَّ رَجُلًا قَالَ يَا رَسُولَ اللَّهِ إِنَّ لِي قَرَابَةً أَصِلُهُمْ وَيَقْطَعُونِي وَأُحْسِنُ إِلَيْهِمْ وَيُسِيئُونَ إِلَيَّ وَأَحْلُمُ عَنْهُمْ وَيَجْهَلُونَ عَلَيَّ فَقَالَ لَئِنْ كُنْتَ كَمَا قُلْتَ فَكَأَنَّمَا تُسِفُّهُمْ الْمَلَّ وَلَا يَزَالُ مَعَكَ مِنْ اللَّهِ ظَهِيرٌ عَلَيْهِمْ مَا دُمْتَ عَلَى ذَلِكَ
صحيح مسلم - (ج 12 / ص 412)

ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து “அல்லாஹ்வின் தூதரே! எனக்கு உறவினர்கள் சிலர் உள்ளனர். அவர்களுடன் நான் ஒட்டி உறவாடுகிறேன். ஆனால், அவர்கள் எனது உறவை முறிக்கின்றனர். நான் அவர்களுக்கு உபகாரம் செய்கிறேன். ஆனால் அவர்கள் எனக்கு தீமை செய்கிறார்கள். (அவர்கள் என்னை புண்படுத்தும் போது) அவர்களை நான் சகித்துக் கொள்கிறேன். (ஆனாலும்) அவர்கள் என்னிடம் அறியாமையோடு நடந்து கொள்கிறார்கள் என்று கூறினார்கள்.

அதற்கு நபி (ஸல்) அவர்கள் நீங்கள் சொன்னதைப் போன்று நடந்திருந்தால் அவர்களது வாயில் நீங்கள் சுடுசாம்பலைப் போட்டவரைப் போன்றுதான். இதே நிலை யில் நீங்கள் நீடித்திருக்கும் வரை அல்லாஹ்விடமிருந்து ஓர் உதவியாளர் அவர்களுக் கெதிராக உங்களுடன் இருந்து கொண்டே இருப்பார் எனக் கூறினார்கள். (அறிவிப்பவர்: அபு ஹுரைரா (ரழி), நூல்: முஸ்லிம்)

உறவுக்காரர்கள் எவ்வளவுதான் விழகிப் போனாலும், நல்லதற்குப் பதிலாக தவறாகப் பேசினாலும், திட்டினாலும், அதையெல்லாம் பொறுத்துக் கொண்டு உறவைப் பேணி வாழ்பவருக்கு அல்லாஹ்விடமிருந்து உதவியாளர் நியமிக்கப்பட்டு உதவி செய்யப் படுகிறார். இவரை எதிர்த்து நிற்கும் உறவுக்காரருக்கு எதிராக அல்லாஹ்விடமிருந்து வந்த உதவியாளர் பாதுகாப்பாக நிற்பார்.

உபகாரம் செய்வதைக் கூட அவர்கள் ஏற்காமல் தீமை செய்ய முனைந்தால் தீமை செய்ய முனைபவருக்கே அது கேடாக அமையும். வாயில் சுடுசாம்பலை போட்டால் எவ்வளவு வலி, துன்பம் ஏற்படுமோ அந்தளவு வலியை அவர்களே அனுபவிப்பார்கள்.

உறவை துண்டிக்கும்போதும் சேர்ந்து நடப்பவனுக்கு நன்மையும், விழகி நடப்ப வனுக்கு பாவமும் வந்து சேர்கிறது. எனவே தான் உறவை வெட்டி நடப்பவனுடன் ஒட்டி நடக்குமாறு நபிகளார் (ஸல்) அவர்கள் நற்செய்தி சொல்கிறார்கள்.

## செலவு செய்தல்

தங்களுடைய விவகாரங்களில் கவனம் செலுத்துவது போல் உறவினர்கள் விடயத்திலும் கவனம் செலுத்தி அவர்களுடைய பொருளாதார நிலமைகளையும் கவனிக்க வேண்டும் பிறருக்காக தர்மங்கள் செய்யும் போது முதலில் குடும்ப உறவுகளிலிருந்தே ஆரம்பிக்கவும் வேண்டும்.

தாங்கள் ஈட்டிய செல்வத்தை எப்படி செலவழிக்க வேண்டும், யாருக்கு செலவழிக்க வேண்டும் என்பதை சஹாபாக்கள் நபி முஹம்மத் (ஸல்) அவர்களை அணுகி விளக்கம் கேட்டார்கள்.

يَسْأَلُونَكَ مَاذَا يُنْفِقُونَ قُلْ مَا أَنْفَقْتُمْ مِنْ خَيْرٍ فَلِلْوَالِدَيْنِ وَالْأَقْرَبِينَ وَالْيَتَامَى وَالْمَسَاكِينِ وَابْنِ السَّبِيلِ وَمَا تَفْعَلُوا مِنْ خَيْرٍ فَإِنَّ اللَّهَ بِهِ عَلِيمٌ

*நபியே! அவர்கள் உம்மிடம் எதை (யாருக்கு) செலவு செய்வது? என்று கேட்கின்றனர். நன்மை தரும் எதனை நீங்கள் செலவளித்தாலும் நன்மையே. (அது) பெற்றோர்கள், நெருங்கிய உறவினர்கள், அநாதைகள், ஏழைகள், வழிப்போக்கர்கள் ஆகியோருக்குரியதாகும் என்று நீர் கூறுவீராக. மேலும் நீங்கள் செய்கின்ற எந்தவொரு நன்மையானாலும் நிச்சயமாக அல்லாஹ் அதை நன்கறிந்தவனாவான்.* (2:219)

இவ்வசனத்தில் செலவளிப்பவர்களில் முன்னுரிமை பெறுபவர்களைப் பற்றி அல்லாஹ் விளக்கப்படுத்துகிறான். அதில் ஒரு வகுப்பினர்களாக உறிவனர்களும் அடங்கப் பெற்றார்கள்.

لَنْ تَنَالُوا الْبِرَّ حَتَّى تُنْفِقُوا مِمَّا تُحِبُّونَ وَمَا تُنْفِقُوا مِنْ شَيْءٍ فَإِنَّ اللَّهَ بِهِ عَلِيمٌ

*''நீங்கள் நேசிப்பவற்றிலிருந்து (நல்லறங்களில்) செலவு செய்யாதவரையில் நீங்கள் நன்மையை அடைந்துகொள்ள மாட்டீர்கள். நீங்கள் எதைச் செலவு செய்தாலும் அதை அல்லாஹ் நன்கறிந்தவனாவான்.* (3:92)

மதீனாவிலிலேயே மதீனாவாசிகளில் பேரீத்தம் பழத்தோட்டங்கள் அதிகம் உடையவராக அபூ தல்ஹா (ரழி) இருந்தார். அவரது சொத்துக்களில் அவருக்கு மிக விருப்பமானதாக 'பைரூஹா' தோட்டம் இருந்தது. பள்ளிவாசலுக்கு அருகில் அது அமைந்திருந்தது. நபி (ஸல்) அவர்கள் அதன் உள்ளே போய், அதன் சுவையானத் தண்ணீரைக் குடிப்பார்கள். இந்த வசனம் (3:92) இறங்கியதும் அபூ தல்ஹா (ரழி), நபி (ஸல்) அவர்களிடம் வந்து, ''இறைத் தூதர் அவர்களே! அல்லாஹ் உங்கள் மீது 3:92 வசனத்தை இறக்கியுள்ளான். என் சொத்தில் எனக்கு மிகவும் விருப்பமானது பைரூஹாதான். அதை அல்லாஹ்வின் வழியில் நான் தர்மம் செய்கிறேன். அதன் நன்மையை நற்கூலியை அல்லாஹ்விடமே ஆதரவு வைக்கிறேன். அல்லாஹ்வின் நாட்டப்படி அதை நீங்கள் செலவு செய்து கொள்ளுங்கள்'' என்றார்.

அப்போது நபி (ஸல்) அவர்கள் 'நல்லது. இது லாபம் தரும் சொத்தாகும், இது லாபம் தரும் சொத்தாகும், எனக் கூறிவிட்டு இது விஷயமாக நீர் கூறியதைக் கேட்டேன். ''உமது நெருங்கிய உறவினர்களுக்கு இதை பங்கீடு செய்வதையே நான் விரும்புகிறேன்" என்று கூறினார்கள். உடனே அபூ தல்ஹா (ரழி) அவர்கள் 'இறைத் தூதர் அவர்களே! அப்படியே செய்கிறேன்" என்று கூறி அந்த தோட்டத்தைத் தன் நெருங்கிய உறவினர்களுக்கும் தன் சிறிய தந்தையின் மக்களுக்கும் பங்கிட்டுக் கொடுத்தார்கள். (அறிவிப்பவர் அனஸ் (ரழி), நூல்: புகாரி–1461, முஸ்லிம்–998)

**பிரச்சாரப்பணியில் முதலிடம் கொடுத்தல்.**

இரத்த உறவுடனான உறவுகள் உடைந்து முறிந்து விடாமல் பல வழிகளிலும் பாது காத்துக் கொள்ளவதில் இப்பொருளாதார உதவி காணப்பட வேண்டும். அது போல் நன்மையான காரியங்களில் மார்க்க விடயங்களில் வழி காட்டுதலிலும் அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்திட வேண்டும்.

وَأَنْذِرْ عَشِيرَتَكَ الْأَقْرَبِينَ

*நபியே உன் குடும்பத்தில் நெருங்கிய உறவினர்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்வீராக* (**26:214**) என்ற வசனம் இறங்கியதும் நபி (ஸல்) அவர்கள் குறைஷியர் களை அழைத்தார்கள். குறிப்பாக ஒவ்வொரு குலத்தாரின் பெயர்களைக் குறிப்பிட்டு அழைத்து இந்த மலைக்குப்பின்னாலிருந்து உங்களைத் தாக்குவதற்கு ஒரு குதிரைப் படை வருகிறது என்று நான் சொன்னால் என்னை உண்மைப்படுத்துவீர்களா என்று கேட்டார்கள். ஆம் நீங்கள் சொல்வதை உண்மையென நம்புவோம் எனக் கூறினார்கள். நிச்சயமாக அல்லாஹ்வுடைய தண்டனையை குறித்து பகிரங்கமாக உங்களை நான் எச்சரிக்கிறேன் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அபூலஹப் இதற்கு மறுப்புத் தெரிவித்து இதற்குத் தான் எங்களை ஒன்றுகூட்டினீரா உனக்கு நாசம் உண்டாகட்டும் எனக் கூறினான். அப்போது சூரா லஹபை அல்லாஹ் இறக்கிவைத்தான்.

இன்னுமொரு அறிவிப்பில் நபி(ஸல் அவர்கள் தன்னுடைய மகளைப் பார்த்து முஹம்மதின் மகள் பாதிமாவே, அப்துல் முத்தலிபின் மகள் சபிய்யாவே, அப்துல் முத்தலிபின் பிள்ளைகளே அல்லாஹ்விடத்தில் உங்களுக்கு எதனையும் என்னால் செய்யமுடியாது. நீங்கள் உங்களை நரகத்திலிருந்து காத்துக் கொள்ளுங்கள் நீங்கள் விரும்பிய செல்வத்தை என்னிடம் கேளுங்கள் தருகிறேன் (வேறெதனையும் என்னால் செய்ய இயலாது.) என்று கூறினார்கள். (நூல்: முஸ்லிம்)

குடும்பங்களில் இஸ்லாத்தை முறைப்படி பின்பற்றுவதற்கான அழைப்புப் பணியினை செய்தாகவே வேண்டும். குர்ஆன் சுன்னா அடிப்படையில் அகீதா மற்றும் இபாதத்களை ஒழுங்குப்படுத்துவதன் அவசியம் பற்றி உபதேசிக்க வேண்டும். இதனால் குடும்ப உறவுகள் பகைத்துக் கொண்டாலும் எம்மீது எவ்வித குற்றமுமில்லை. அவர்களை நரகப் படுகுழியிலிருந்து பாதுகாக்கவே உபதேசிக்கிறோமே தவிர சுய நலனுக்கல்ல என்பதை புரிய வைக்க வேண்டும்.

இஸ்லாத்திற்கு முரணான காரியங்களை உறவுக்காரர்கள் செய்கிறார்கள் என்று தெரிந்தால் அதிலிருந்து ஒதுங்கிக் கொள்வதோடு தீமைக்கெதிரான பிரச்சாரத்தி னையும் மேற் கொள்ளுதல் வேண்டும். பாவத்திற்கு துணை போவதை இஸ்லாம் அனுமதிக்க வில்லை.

இதுவும் உறவு முறை பேணுதலில் ஒரு அடிப்படையாகும். நபிகளாருடைய பிரச்சாரத்தில் கொடுக்கப்பட்ட முதலுரிமையை இச்செய்தியின் மூலம் அல்லாஹ் தெளிவுப்படுத்துகிறான

அல்லாஹ்வுக்காகவே ஒருவரை நேசிக்க வேண்டும். அல்லாஹ்வுக்காகவே ஒருவருடன் கோபிக்க வேண்டும் என நபி (ஸல்) கூறியதன் அடிப்படையிலே உறவுகளும் பேணப்பட வேண்டும்.